DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.422/2017**

**P.W.5**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

NAME : பால் கிங்க்ஸ்லி

Father Name : தினகர்

VILLAGE :

CALLING :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.07.2025.

(1, 2, 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜர் இல்லை, 4 வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 3 வது எதிரி இறந்துவிட்டார் )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு அ.சா.1 பாண்டிச்சாமி, அ.சா.2 திருமலைக்குமார், அ.சா.3 பீர் முகைதீன், அ.சா.4 சங்கரநாராயணன் ஆகியோர்களை தெரியும். சம்பவ நாளான 03.01.2016 அன்று திடீர் நகர் சரக காவல் ஆளிநர்களுடன் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் 257 வது பிறந்த நாளை முன்னிட்டு காலை 8 மணி முதல் பாதுகாப்பு பணியில் இருந்தோம். எங்களுடன் நுண்ணறிவு பிரிவை சார்ந்த தலைமை காவலர் 308 அ.சா.1 பாண்டிச்சாமி அவர்களும் எங்களுடன் பாதுகாப்பு பணியில் வீடியோ கேமராவில் வீடியோ எடுத்துக்கொண்டிருந்தார். வீரபாண்டியன் கட்டபொம்மன் திருவுருவ சிலைக்கு மாலை அணிவிக்க வருபவர்களை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தோம். அன்று மதியம் சுமார் 01.15 மணியளவில் பழந்தமிழர் மக்கள் கட்சியை சார்ந்த மாநில பொது செயலாளர் திரு.வீரக்குமார் என்ற போயன் அவர்கள் TN 65 E 2325 என்ற டாடா சுமோ வாகனத்தில் மாலை அணிவிப்பதற்காக வந்தார். அப்போது

பாண்டிச்சாமி என்பவர் வீடியோ எடுத்துக்கொண்டிருந்தார். அவருடன் இருந்த கணேசன் மற்றும் நாராயணன் ஆகியோர்கள் போலிஸ் தேவுடியா பசங்களா, எங்கள எதுக்குடா வீடியோ எடுக்கிறீங்க என்று ஆபாசமாக திட்டி, அவரை கன்னத்திலும் உடம்பிலும் கைகளால் அடித்தார்கள். காவல் ஆணையாளர் அவர்களது தடை உத்தரவு அமலில் இருப்பதை அறிந்தும், அவர்கள் அத்துமீறி நடந்துகொண்டார்கள். பின்னர் மணிகண்டன், சக்திவேல், கந்தசாமி ஆகியோர்கள் மீண்டும் போலிஸ் தேவுடியா பசங்களா, கைய கால உடையுங்கள் என்றும், கேமராவை உடையுங்கள் என்றும் ஆபாசமாக கூறி கற்களை எறிந்து வன்முறையில் ஈடுபட்டனர். அப்போது திலகர் திடல் உதவி ஆணையர் திரு.பீர் முகைதீன் அவர்களின் வலது முன்னங்கையிலும், திருமலைக்குமார் அவர்களின் இடது கணுக்காலிலும், எஸ்.எஸ்.காலனி சிறப்பு சார்பு ஆய்வாளர் சாட்சி எண்.4 ரவிச்சந்திரன் என்பவருக்கும் கற்கள் பட்டு ரத்தக்காயங்கள் ஏற்பட்டது. அப்போது பாதுகாப்பில் இருந்த நாங்கள் எங்களின் குறைந்த பலத்தைக்கொண்டு அங்கிருந்த ஐந்து நபர்களையும் சுற்றி வளைத்து பிடித்து, பாண்டிச்சாமி என்பவரையும் அரசு வாகனத்தில் ஏற்றி சி1 திடீர் நகர் காவல் நிலையம் கொண்டு வந்தோம். அங்கு சார்பு ஆய்வாளர் திரு.செல்வராஜ் அவர்களிடம் மேற்படி நபர்களை ஒப்படைத்து காவல் ஆய்வாளர் திரு.துரைப்பாண்டி அவர்களிடம் நடந்த விவரம் பற்றி கூறினோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

சம்பவ தினத்தன்று வீரபாண்டிய கட்டபொம்மன் சிலை அருகே சுமார் 10 முதல் 15 போலிசார் பாதுகாப்பு பணியில் இருந்தார்கள். போக்குவரத்து துறை மற்றும் திடீர் நகர் காவல் நிலையத்தார் மூலமாக வீரபாண்டிய கட்டபொம்மன் சிலை அருகே வீடியோ கேமரா மூலம் நிகழ்வுகள் கண்காணிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் வழக்கிற்கு பின்பு வீடியோ கேமராவை ஓடவிட்டு பார்வையிட்டேன். அந்த வீடியோ கேமரா Handy Camera என்றால் சரிதான்.

அன்றைய தினம் தடியடி உத்தரவு உயர் அதிகாரிகளால் பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த தடியடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் கூட்டம் நாலாபுறமும் சிதறி ஓடியது என்றால் சரிதான். அந்த தடியடியில் ஏற்பட்ட தள்ளுமுள்ளு காரணமாக எங்கள் காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு சிறு சிறு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வீடியோ கேமராவை உயர் அதிகாரிகள் பார்வையிட்டனர். அந்த வீடியோ கேமராவில் ஆஜர் எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டதாக காணப்படவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் எங்கள் உயர்அதிகாரிகளுக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் எந்த சம்பவமும் கிடையாது என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-**

என்னுடைய குவிமுய பிரிவு 161(3) விசாரணையில் ஆஜர் எதிரிகளான கணேசன், நாராயணன், வீரக்குமார் ஆகியோர்கள் புகார்தாரரை தாக்கி கேமராவை சேதப்படுத்தியதாக கூறிவிட்டு என்னுடைய முதல் விசாரணையில் ஆஜர் எதிரிகள் மணிகண்டன், சக்திவேல், கந்தசாமி ஆகியோர்கள் கேமராவை சேதப்படுத்தியதாக முன்னுக்கு பின் முரணாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திலேயே இல்லை என்றும், எனது உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4 மற்றும் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

2ம் எதிரி மற்றும் 1 மற்றும் 6 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர்கள் மேற்கொண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 4 மற்றும் 5 எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை –** இல்லை.